(ஆ) தொழிற்சங்க உரிமைகள் தொழிற்சாலைகளில் மறுக்கப்படுதல்

செல்வி கே. பாலபாரதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் ஹூண்டாய் கம்பெனி உட்பட நம்முடைய திருமங்கலத்தில் இருக்கக்கூடிய மெட்டல் பவுடர் கம்பெனி வரை இருபதுக்கும் மேற்பட்ட அரசு, தனியார் கம்பெனிகளில் தொழிலாளர்களுக்குத் தொழிற்சங்கம் அமைப்பதற்கு உரிமையை மறுக்கிறார்கள். அவர்களை இடை நீக்கம் செய்கிறார்கள்; வேலை நீக்கம் செய்கிறார்கள்; ஊதியத்தை வெட்டுகிறார்கள். இதுபோன்ற பல்வேறு தொடர் நெருக்கடிகளையும், பிரச்சினைகளையும் அந்த நிறுவனங்கள் செய்து வருகின்றன. ஆகவே, இது உடனடியாக விவாதிக்கப்பட வேண்டுமென்பதற்காகத் தங்களிடத்தில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக நாங்கள் கவன ஈர்ப்புத் தீர்மானம் ஒன்றைக் கொடுத்தோம். அதை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று வலியுறுத்துகிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அது பரிசீலனையில் இருக்கிறது, உட்காருங்கள். (குறுக்கீடுகள்) திரு. வை. சிவபுண்ணியம், என்ன?

திரு. வை. சிவபுண்ணியம்: பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே மார்க்சிஸ்ட் கட்சியினுடைய தலைவர் செல்வி பாலபாரதி அவர்கள் குறிப்பிட்ட அதே கருத்தை இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே நான் வலியுறுத்துகிறேன். அதேபோல இன்னும் பல்வேறு கூடுதலான கவன ஈர்ப்புத் தீர்மானங்கள், ஒத்திவைப்புத் தீர்மானங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. எங்களுடைய திருவாரூர் மாவட்டத்திலே கொலைகள் தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டேயிருக்கின்றன. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மற்றவையெல்லாம் பரிசீலனையில் இருக்கின்றன, உட்காருங்கள். (குறுக்கீடுகள்) எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) சொல்கிறேன். (குறுக்கீடுகள்)

4. சிறப்புக் கவன ஈர்ப்பு

(அ) சென்னை, டாக்டர் அம்பேத்கர் அரசு சட்டக் கல்லூரியில் மாணவர்களிடையே மோதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சென்னை, டாக்டர் அம்பேத்கர் அரசு சட்டக் கல்லூரியில் பயிலும் மாணவர்களிடையே 12-11-2008 அன்று நடைபெற்ற மோதல் குறித்து அ.இ.அ.தி.மு.க. சார்பாக மாண்புமிகு